# In the Court of the District Munsif, Eraniel

**Original Suit No. 3/2022** **Date:25.02.2026.**

**(PW1)- மேரி எலிசபெத்**

பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

1. நான் வழக்கில் சேர்த்துள்ள பட்டிகை சொத்து சர்வே எண் 169/12 ல் உள்ள வழிபாதை என்று தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் குறிப்பிடும் வழிபாதை எனது வீடு மற்றும் அதை தொட்டு உள்ள நிலம் அமைந்துள்ள சர்வே எண் 168 சம்பந்தமில்லாத வழிபாதை என்றால் சரிதான். எனது வீட்டிற்கு வேறு பாதை உள்ளது என்றால் சரிதான். சர்வே எண் 169/13 பி என்ற சொத்தும் எனக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் தற்போது நினைவில் இல்லை. என்னிடம் காட்டப்படும் நீதிமன்ற ஆணையர் வரைபடத்தில் சர்வே எண் 169/13 பி சொத்திற்கு தாவா வழிபாதை தான் பாதை என்றால் சரிதான்.

2. சர்வே எண் 169/12 பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். சர்வே எண் 169/11 சொத்து எனக்கு பாத்தியப்பட்டதா என்றால் எனக்கு பாத்தியப்பட்டது அல்ல ஆனால் வழிபாதை உள்ளது. அவ்வாறு சர்வே எண் 169/11 ல் வழிபாதை இருப்பதாக தற்போது தான் வழக்கில் முதல் முறை கூறுகிறேன் என்றால் சரியல்ல. சர்வே எண் 169/12 வழிபாதைக்கு மேற்கு பக்கம் காம்பவுண்ட் சுவர் உள்ளது என்றால் ஆதியில் இல்லை தற்போது அடைத்து கட்டியுள்ளார்கள். சர்வே எண் 169/12 சொத்தின் மேற்கு பக்கம் இரும்பு வேலி இருக்கிறது என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

3. எனது நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளவாறு வா.சா.ஆ.2 ஆவணத்தில் வழக்கு பட்டிகை 3 நபர்களுக்கு பொது பாதையாக குறிப்பிட்டு குறித்துள்ளனர் என்பது வா.சா.ஆ.2 ஆவணத்தில் துலங்கவில்லை என்றால் நான்

அவ்வாறு குறிப்பிடவில்லை. நான் நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளது போல் பாதை வகைக்கு ஒதுக்கப்பட்ட பகுதியை கூட்டு உரிமையாளராக தங்களது பாகத்திற்கு பிரிக்கப்பட்ட பகுதியை ரோட்டில் இருந்து அனுகுவதற்கு அனுபவத்தில் என்று குறிப்பிட்டுள்ள சங்கதியும், வழக்கு பட்டிகை சொத்து நீளம் மற்றும் அகலம் குறிப்பிடப்பட்டுள்ளது என்ற விபரம் வா.சா.ஆ.2 அவணத்தில் துலங்காது என்றாலும் சரியல்ல.

4. சர்வே எண் 169/12 சொத்திற்க்கான பட்டா பிரதிவாதியின் பெயரில் உள்ளது என்றால் அது போலியாக ஏற்படுத்தப்பட்டது. பிரதிவாதி அவரது முன்ஜென்மியின் பெயரில் இருந்த பட்டாவை தான் கிரயம் பெற்ற பின்பு தனது பெயருக்கு மாற்றியுள்ளார் என்றால் சரியல்ல. நான் பிரதிவாதி பெயரில் உள்ள சர்வே எண் 169/12 பொறுத்து உள்ள பட்டாவை ரத்து செய்ய கேட்டு வருவாய் கோட்டாச்சியர் பத்மனாபபுரம் அவர்களிடம் மனு கொடுத்து மேற்படி மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான், ஆனால் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ள காரணத்தினால் தள்ளுபடி செய்யப்பட்டது.

5. மேற்படி தள்ளுபடி உத்தரவின் மாவட்ட வருவாய் அலுவலர் இடம் சீராய்வு மனு தாக்கல் செய்து அது தள்ளுபடி ஆகிவிட்டது என்றால் சரியல்ல, நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருப்பதால் மேற்படி மனு விசாரணை செய்யாமல் நிலுவையில் உள்ளது. மேற்படி சீராய்வு மனு தள்ளுபடி ஆகிவிட்டது என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. பிரதிவாதியின் முன்ஜென்மியின் உடன் பிறந்த சகோதரர் மற்றும் சகோதரிகள் சர்வே எண் 169/12 ல் முன்பு இருந்த வழிபாதை அவசியம் இல்லாத காரணத்தினால் அதை பிரதிவாதியின் முன்ஜென்மியான சிவாநந்ததாஸ் என்பவருக்கு விட்டுக்கொடுத்துவிட்டார்கள் என்றால் சரியல்ல, அவர்கள் அவ்வாறு எழுதிக்கொடுக்க முடியாது.

6. சர்வே எண் 169/12 பாதை பயன்பாட்டில் இல்லாமலும் அவசியமற்றதும்

என்பதால் அது உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. பிரதிவாதியின் தகப்பனார் காவல் நிலையத்தில் பாதை குறித்து இடையூறு செய்யமாட்டேன் என்றும் பாதைக்கு என்று இடம் விட்டுக்கொடுத்துவிட்டேன் என்று வழக்கிற்காக பொய்யாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. நான் குறிப்பிடும் பாதையில் ஆதியில் இருந்தே கேட் இல்லை என்றால் சரிதான், தற்போது யாரும் பயன்படுத்த முடியாத வகையில் கேட் அமைத்துள்ளார்கள். நான் கேட் அமைத்திருப்பதாக வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

7. வா.சா.ஆ.2 அவணத்தில் 6 ஆம் கண்டத்திலிருந்து தாவா பாதை ஆரம்பிப்பதாக குறிப்பிட்டு சங்கதி மேற்படி ஆவணத்தில் துலங்காது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 ஆவணத்தில் மொத்தம் 2 பட்டிகை சொத்து தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் குறிப்பிடும் பாதையை சர்வே எண் 169/12 முன்பு உள்ள சொத்து வரை அனுபவிப்பதில் பிரதிவாதிக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை என்றால் அதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது. நான் இல்லாத ஒரு பாதையை உருவாக்கி பிரதிவாதியின் சொத்தை ஆக்கிரமிக்க நினைக்கிறேன் என்றால் சரியல்ல. நான் பிரதிவாதியை கஷ்டபடுத்த வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் இந்த வழக்கை தாக்கல் செய்ய வழக்குமூலமே இல்லை என்றாலும் சரியல்ல. தாவா பாதை தொடங்கும் இடத்தில் ஆதியிலேயே நுழைவாயில் அமைக்கப்பட்டு இருந்தது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் பிரதிவாதி கேட் அமைக்க முயற்சி செய்தார் என்று வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

8. நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை பார்வையிடும் போது நான் உடனில்லை என்றாலும் எனது உறவினர் தான் உடன் இருந்தனர் என்றலும் சரிதான், எனது அண்ணன் மட்டும் உடன் இருந்தார். மேற்படி நுழைவாயில் வழியாகதான் அனைவரும்

மேற்படி பாதையை பயன்படுத்தி வருகிறார்கள் என்றால் சரியல்ல. எனது வழக்கு பிரதிவாதியின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றால் சரியல்ல.

**(ஒப்பம்)**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**இரணியல்.**